**சாதாரண கூட்டம்**

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஜீலை மாதம் 15ம் நாள்** புதன்கிழமை பிற்பகல் 12.00 **மணிக்கு நடைபெற்ற** அவசரக்**கூட்ட நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>15.07.2020</td><td>

**பொருள் எண் 1**

இந்நகராட்சி 01.04.1994 முதல் மூன்றாம் நிலை நகராட்சியாக தோற்றுவிக்கப்பட்டு பின்னர் 01.04.1998 முதல் இரண்டாம் நிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு தற்போது செயல்பட்டு வருகிறது. இந்நகராட்சி மூன்றாம் நிலை நகராட்சியாக உள்ள காலத்தில் 1920 தமிழ்நாடு மாவட்ட நகராட்சிகள் சட்டம் பிரிவு 81-ன் படி முதல் முறையாக அரையாண்டுக்கு வரிகள் விகிதம் நிர்ணயம் செய்யப்பட்டு வசூலிக்க கீழ்கண்டவாறு சொத்துவரி பிரிக்கப்பட்டுள்ளதை நகர்மன்ற தீர்மான எண் 24 நாள் 18.05.1994-ல் அனுமதிக்கப்பட்டது.

**விவரம்**

**சொத்துவரி (பிரிவு-81) அரையாண்டு வரி விபரம்**

<table>
<tr><th></th><th>பிரிவு 81 (1) (2)</th><th>பிரிவு 81 (3)</th></tr>
<tr><td rowspan="2">எந்த காரியத்திற்காக</td><td>கட்டிடங்களுக்கம் கட்டிடங்களை சேர்ந்த காலிமனைகளும்</td><td>விவசாயத்திற்கு பயன்படுத்தாதலும் கட்டிடங்களை சேர்ந்தால்போல் இல்லாததுமான நிலங்கள் காலி மனைகள்</td></tr>
<tr><td>கட்டிடங்களின் வருடாந்திர (வாடகை) மதிப்பின் பேரில்</td><td>நிலங்களின் விலை மதிப்பின் பேரில்</td></tr>
<tr><td>பொதுக்காரியங்களுக்கு வரி</td><td>4.1/2%</td><td>1/4%</td></tr>
<tr><td>குடிநீர் விநியோகம் மற்றும் சாக்கடை வரி</td><td>3 %</td><td>1.4 %</td></tr>
<tr><td>மின்விளக்கு வரி</td><td>3 %</td><td>1.8 %</td></tr>
<tr><td>கக்கூஸ் வரி</td><td>2 %</td><td>1.8 %</td></tr>
</table>

இந்நகராட்சியில் மேற்கண்டவாறு சொத்துவரியில் அரையாண்டுக்கு 2.5 சதவீதம் கல்வி வரி வசூலிக்கப்படாமல் சொத்துவரி நிர்ணயம் செய்யப்பட்டு வருகிறது.

சொத்துவரியுடன் சேர்த்து அரையாண்டிற்கு 2.5 சதவீதம் கல்விவரி வசூலிக்கப்படுதில்லை எனவும், இது நிதியிழப்பாக கருதப்படும் எனவும், உள்ளாட்சி நிதித்தணிக்கை துறையின் தணிக்கை அறிக்கைகளில் தொடர்ந்து தணிக்கைத் தடை எழுப்பப்பட்டு வருகிறது.

</td><td>

**தீர்மானம் எண்:-745**

**அனுமதிக்கப்பட்டது**

</td></tr>
</table>

| | | |
|---|---|---|
| | இந்நகர் பகுதியில் தொடக்கப்பள்ளி, உயர்நிலைப்பள்ளி மற்றும் மேல்நிலைப்பள்ளிகள் ஏதும் இந்நகராட்சியின் பராமரிப்பில் செயல்படவில்லை. மேலும். கல்வி வரியின் வாயிலாக ஏற்படும் வரவினமானது நகராட்சியின் பராமரிப்பில் உள்ள கல்வி நிறுவனங்களுக்கு மட்டுமே செலவிட இயலும் என்ற காரணத்தினால் கல்வி வரி வசூலிக்கப்படாததன் காரணமாக இந்நகராட்சிக்கு நிதியிழப்பு ஏதும் ஏற்படுவதில்லை.<br>எனவே, இந்நகராட்சியில் சொத்துவரியுடன் சேர்த்து அரையாண்டிற்கு 2.5 சதவீதம் கல்விவரி வசூலிப்பதிலிருந்து விலக்களிக்க கோரி அரசிற்கு உரிய பிரேரணை சமர்பிக்க மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் அனுமதிக்கலாம்<br>(ந.க.எண்.2097/2016/அ1) | |
| 15.07.2020 | **பொருள் எண் 2**<br>இந்நகராட்சியின் பொதுப்பிரிவில் இயங்கி வரும் TN 50 U 2453 ஈப்பு வாகனத்திற்கு இன்சூரன்ஸ் காலம் 18.07.2020 உடன் முடிவடைவதால் 19.07.2020 முதல் 18.07.2021 வரை ஓராண்டு காலத்திற்கு புதுப்பித்துக் கொள்ள ரூ.11,750/-ஐ தி-ஓரியண்டல் இன்சூரன்ஸ் கம்பெனி லிமிடெட், மன்னார்குடி என்ற நிறுவனத்திற்கு செலுத்த மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதிக்கலாம்.<br>2. பொது நிதியின் கீழ் மேற்கொள்ளலாம்.<br>(ந.க.எண். 617/2020/இ1) | **தீர்மானம் எண்:-746**<br>**அனுமதிக்கப்பட்டது** |
| 15.07.2020 | **பொருள் எண் 3**<br>திருவாரூர் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் கொரோனா தடுப்பு நடவடிக்கைகள் குறித்த ஆய்வுக் கூட்டத்தில் நகராட்சியில் பணிபுரியும் தூய்மை பணியாளர்கள் மற்றும் அலுவலக பணியாளர்கள் அனைவருக்கும் பொது உடற் பரிசோதனை மேற்கொள்ளுமாறு தெரிவிக்கப்பட்டது. மேலும் தூய்மை பணியாளர்களுக்கு தேவையான பாதுகாப்பு உபகரணங்கள் மற்றும் கிருமிநாசினிகள் அனைத்தும் இருப்பு வைத்துக் கொள்ளும்படி அறிவுறுத்தப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் 02.04.2020ம் தேதிய கடித எண் 3336/J2/2020-9ல் கொரோனா வைரஸ் தடுப்பு நடவடிக்கைக்கான எந்த ஒரு பணிக்கும் ஒப்பந்த வழிமுறையினை பின்பற்றாமல் நேரடியாக பணி மேற்கொள்ளலாம் என அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. கீழ்குறிப்பிட்டுள்ள பொருட்கள் கொரோனா தடுப்பு பணிக்காக தேவைப்படுகிறது. | **தீர்மானம் எண்:-747**<br>**அனுமதிக்கப்பட்டது** |

| வ.எண் | தேவைப்படும் பொருட்கள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | முகக்கவசம் | 1000 எண்ணிக்கை |
| 2 | லைசால் | 500 லிட்டர் |
| 3 | சோடியம் ஹைபோகுளோரைடு | 2000 லிட்டர் |
| 4 | சுண்ணாம்பு | 5000 கிலோ |
| 5 | Pulseoxi meter | 5 எண்ணிக்கை |

எனவே மேற்படி பொருட்களை உடனடியாக வாங்குவதற்கு ஆகும் உத்தேச செலவினத் தொகை ரூ.2,00,000/-க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1. மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண். 0335/2020/எச்1)

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி

<u>சாதாரண கூட்டம்</u>

**கூத்தாநல்லூர் நகராட்சியின் 2020ம் ஆண்டு ஜீலை மாதம் 31ம் நாள் வெள்ளிக்கிழமை காலை 12.00 மணிக்கு நடைபெற்ற சாதாரணக் நடவடிக்கைகள்**

<table>
<tr><th>மன்றக்கூட்டம் நடைபெற்ற நாள்</th><th>வரிசை எண் மற்றும் மன்ற கூட்டப்பொருள்</th><th>மன்றத்தின் தீர்மானம்</th></tr>
<tr><td>31.07.2020</td><td>பொருள் எண் 1<br>நகராட்சி ஆணையர் அவர்களது ஜீன் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)</td><td>தீர்மானம் எண்:-748<br>ஏற்கலாம்</td></tr>
<tr><td>15.07.2020</td><td>பொருள் எண் 2<br>நகராட்சி பொறியாளர் அவர்களது ஜீன் 2020 மாத நாட்குறிப்பு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது<br>அலுவலக குறிப்பு :- பதிவு செய்யலாம் (ந.க.எண். 2105/2011/சி1)</td><td>தீர்மானம் எண்:-749<br>ஏற்கலாம்</td></tr>
<tr><td>15.07.2020</td><td>பொருள் எண் 3<br>இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 50 X – 2638 TATA ACE வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 740 நாள் 30.06.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 28.07.2020 ஆம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.
<table>
<tr><th>வ. எண்</th><th>ஒப்பந்ததாரர் பெயர்</th><th>மதிப்பீடு தொகை</th><th>ஒப்பந்தபுள்ளி தொகை</th></tr>
<tr><td>1</td><td>ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td rowspan="2">50,000</td><td>49,824</td></tr>
<tr><td>2</td><td>கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி</td><td>55,490</td></tr>
</table>
மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 523/2020/எச்1)</td><td>தீர்மானம் எண்:-750<br>ஏற்கலாம்</td></tr>
</table>

**பொருள் எண் 4**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் இயங்கி வரும் TN 50 U – 0518 என்ற டம்பர் பின் குப்பை பெட்டிகள் 12 பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 734 நாள் 30.06.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 28.07.2020 ஆம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 1,10,000 | 1,09,500 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | | 1,12,500 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 452/2020/எச்1)

**தீர்மானம் எண்:-751**

**ஏற்கலாம்**

**பொருள் எண் 5**

இந்நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பராமரிக்கப்பட்டு வரும் மினி டிப்பர் லாரி TN 50 AY – 2779 வாகனத்திற்கு பழுது நீக்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 739 நாள் 30.06.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 28.07.2020 ஆம் தேதி கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | ஒப்பந்ததாரர் பெயர் | மதிப்பீடு தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | 20,000 | 19.956 |
| 2 | கணபதி ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி | | 21.440 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள ஆனந்தராஜ் ஆட்டோ டீசல் ஒர்க்ஸ் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி குறைவாக உள்ளது. எனவே மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 319/2020/எச்1)

**தீர்மானம் எண்:-752**

**ஏற்கலாம்**

**பொருள் எண் 6**

இந்நகராட்சி கணினி அறைக்கு புதியதாக இருக்கைகள் மற்றும் ஆணையர் அறைக்கு சாய்வு நாற்காலி வாங்கும் பணிக்கு இந்நகர் மன்ற தீர்மான எண் 742 நாள் 30.06.2020ன்படி அனுமதிக்கப்பட்டு 24.07.2020 அன்று கோரப்பட்ட ஒப்பந்தபுள்ளியில் கீழ்கண்ட நிறுவனங்களிடமிருந்து இரண்டு ஒப்பந்தபுள்ளிகள் கீழ்கண்டவாறு வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | நிறுவனத்தின் பெயர் | ஒப்பந்த தொகை | ஒப்பந்தபுள்ளி தொகை |
|---|---|---|---|
| 1 | பகவதி ஏஜென்சீஸ் நிறுவனம் மன்னார்குடி | 40000 | 39,500 |
| 2 | காவ்யா என்டர்பிரைசஸ் நிறுவனம் மன்னார்குடி | 40000 | 40,100 |

மேற்கண்டவாறு பெறப்பட்ட இரண்டு ஒப்பந்தபுள்ளிகளில் வரிசை எண் 1ல் உள்ள பகவதி ஏஜென்சீஸ் நிறுவனம் மன்னார்குடி நிறுவனத்திடமிருந்து வரப்பெற்ற ஒப்பந்தபுள்ளி தொகை குறைவாக உள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

குறைவான ஒப்பந்தபுள்ளியினை மன்றம் ஏற்கலாம்.

(ந.க.எண். 591/2020/இ1)

**தீர்மானம் எண்:-753**

**ஏற்கலாம்**

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 7**<br>இந்நகராட்சி பொது சுகாதார பிரிவில் இயங்கி வரும் TN50 AY 2779 என்ற டிப்பர் லாரி வாகனம் 23.08.2019 அன்று தி பிடித்து எரிந்து அதனை சீர் செய்யும் பொருட்டு அசோக் லேலன்ட் நிறுவனத்தின் அனுமதி பெற்ற L.K.S ஆட்டோ மொபைல்ஸ் சர்வீசஸ் தஞ்சாவூர் என்ற நிறுவனத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டிருந்தது. மேலும் வாகன காப்பீட்டு நிறுவனமான ஓரியன்டல் இன்சூரன்ஸ் நிறுவனத்திற்கு 24.08.2019 அன்று தகவல் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் வாகனம் முழுவதுமாக L.K.S ஆட்டோ மொபைல்ஸ் சர்வீசஸ் நிறுவனத்தால் சீர் செய்யப்பட்டு 27.01.2020 அன்று நகராட்சியிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்படி நிறுவனம் 31.01.2020 அன்று ரூ.600879/-க்கான தொகை பட்டியல் சமர்பித்துள்ளார்கள். நகராட்சி பொது நிதியில் போதுமான நிதி இல்லாத காரணத்தினாலும், காப்பீடு நிறுவனம் காப்பீட்டு தொகை வழங்காத காரணத்தினாலும் இதுநாள்வரை பட்டியல் தொகை மேற்படி நறுவனத்திற்கு வழங்கப்படவில்லை. தற்போது 30.07.2020 அன்று காப்பீட்டு நிறுனத்தால் அவ்வாகனத்திற்கு இன்சூரன்ஸ் தொகை ரூ.218000/- ECS ல் வரப்பெற்றுள்ளது. எனவே L.K.S ஆட்டோ மொபைல்ஸ் நிறுவனத்தின் பட்டியலில் உள்ள ரூ. 600879/-னை நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>மன்றம் ஏற்கலாம்.<br>(ந.க.எண். 709/2019/எச்1) | **தீர்மானம் எண்:-754**<br>**ஏற்கலாம்** |

| | | |
|---|---|---|
| | **பொருள் எண் 8**<br>கூத்தாநல்லூர் நகராட்சி 24 வார்டுகளை உள்ளடக்கிய 12.30 சதுர கி.மீ பரப்பளவும், 25481 மக்கள் தொகையும், 6903 குடியிருப்புகளும் 681 வணிக நிறுவனங்களும் உள்ள நகரமாகும். இந்நகரில் பொது சுகாதார பணிகளுக்கு 40 நிரந்தர தூய்மை பணியாளர்கள் அனுமதிக்கப்பட்டு 21 பணியாளர்கள் மட்டும் பணிபுரிந்து வருகின்றனர். மீதமுள்ள 19 பணியிடங்கள் காலியாக இருந்து வருகிறது. வளர்ந்து வரும் நகரின் சுகாதாரத்தை கருத்தில் கொண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டத்தினை சிறப்பாக செயல்படுத்துவதற்கு நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசாணை நிலை எண் 101, நாள் 30.04.1997ல் நகரில் பொது சுகாதாரத்தை நல்ல முறையில் பராமரிக்க தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் தேவை குறித்து நிர்ணயம் செய்யப்பட்ட அளவுகோல்படி தற்போது உள்ள நிலையில் கூத்தாநல்லூர் நகராட்சிக்கு பொது சுகாதார பணிகளுக்காக கீழ்கண்டவாறு தூய்மை பணியாளர்கள் தேவைப்படுகிறது. | **தீர்மானம் எண்:-755**<br>**ஏற்கலாம்** |

| வ.எண். | வேலை வகைப்பாடு | அரசாணையின்படி அனுமதிக்கப்பட்ட தூய்மை பணியாளர்கள் அளவு கோல் | இந்நகராட்சிக்கு தேவைப்படும் தூய்மை பணியாளர்கள் |
|---|---|---|---|
| 1 | 6903 குடியிருப்புகள் மற்றும் 681 வணிக நிறுவனங்கள் மொத்தம் 7584 (தூய்மை இந்தியா திட்ட பரப்புரையாளர்களின் கணக்கெடுப்பின்படி) | 3 நபர் (250 குடியிருப்புகளுக்கு) | 91 |
| 2 | பெரிய லாரி (1) | 4 நபர் | 4 |
| 3 | டம்பர் பிளேசர் (1) | 2 நபர் | 2 |
| 4 | கழிவுநீர் ஊர்தி (1) | 2 நபர் | 2 |
| 5 | ஆட்டோ (TATA ACE-3) | 2 நபர் | 6 |
| 6 | உரக்கிடங்கு பராமரிக்க | 2 நபர் | 2 |
| | | மொத்தம் | 107 |

| | | |
|---|---|---|
| | மேற்கண்டவாறு 107 தூய்மை பணியாளர்கள தேவைப்படும் நிலையில் தற்போது 21 தூய்மை பணியாளர்கள் நகராட்சி மூலமும், 52 தனியார் தூய்மை பணியாளர்களை கொண்டும் தூய்மை பணிகள், திடக்கழிவு மேலாண்மை பணிகள் தொற்று நோய் கட்டுப்படுத்தும் பணிகள், டெங்கு காய்ச்சல் கட்டுப்படுத்துதல் பணிகள், கொசு ஒழிப்பு பணி, போலியோ சொட்டு மருந்து பணி, கழிவறை சுத்தம் செய்தல் பணி, அரசாங்க பள்ளிகளின் கழிவறை சுத்தம் செய்யும் பணி போன்ற முக்கியமான பணிகளைசரிவர செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. மேலும் மேற்படி 52 தனியார் தூய்மை பணியாளர்களை பணியமர்த்திக் கொள்வதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களால் அனுமதி வழங்கப்பட்டதற்கான மூன்று ஆண்டு காலம் முடிவடைய உள்ளது. எனவே மேற்படி நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதியினை மேலும் மூன்று ஆண்டுகளுக்கு புதுப்பித்து வழங்கவும், தற்போது அதிகப்படியாக தேவைப்படும் 15 நபர்களுக்கும் சேர்த்து மொத்தம் 67 தூய்மை பணியாளர்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி மேற்குறிப்பிட்டுள்ள அளவில் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி விலைவிகித அடிப்படையில் தனியார் மூலம் பணியாளர்கள் பெறப்பட்டு பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு<br>1. மன்றம் அனுமதி வழங்கலாம்<br>2. பொது சுகாதார நலன் கருதி 67 தூய்மை பணியாளர் பணியிடங்களை நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் அனுமதி பெற்று அவர்களின் வழிகாட்டி நெறிமுறைகளின்படி மேற்குறிப்பிட்ட அளவில் மாவட்ட ஆட்சியரின் தினக்கூலி விலைவிகித அடிப்படையில் தனியார் மூலம் பணியாளர்கள் பெறப்பட்டு பணி மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண். 769/2017/எச்1) | |

ஆணையர் / தனி அலுவலர்
கூத்தாநல்லூர் நகராட்சி